வைத்தீசுவரன் கோயில்

# முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்

## மூலமும் தெளிவுரையும்

முத்துக் குமாரசுவாமி என்று அழைக்கப்படும் முருகப் பெருமானின் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் இலக்கியம் ஆகும். இம்முருகப் பெருமான் வைத்தீசுவரன் கோயில் என்று அழைக்கப்படுகின்ற புள்ளிருக்கு வேலூரில் கோயில் கொண்டுள்ளான். இந்நூல் குமரகுருபரரால் இயற்றப் பட்டது.

### விநாயகர் வணக்கம்

### (ஆசிரிய விருத்தம்)

பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான்
பொருப்பிற் பிறந்துதவளப்
பொழிநிலவு தவழுமுழு வெள்ளிவே தண்டத்தொர்
போர்க்களிற் றைப்புணர்ந்து
தென்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற்
செழும்பிடி பயந்தளித்த
சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக் கன்றினிரு
செஞ்சரணை யஞ்சலிப்பாம்
மின்பூத்த சிற்றிடைப் பேரமர்க் கடகடவுள்
வேழங் கடம்படுபடா
வெம்முலைக் கோடுகொண் டுழுதுழு துழக்கமுகை
விண்டுதண் தேன்றுளிக்கும்
கொன்பூத்த தெரியற் கடம்பணி தடம்புயக்
குரிசிலைப் பொருசிலைக்கைக்
குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவுமென்
கொழிதமிழ்க் கவிதழையவே.

முடுக்குங் கடர்ப்பொன் தலத்திழைத்த
முழுநீ லத்தி னொழுகொளியின்
முழுகுங் கடவுள் மால்யானை
முகிலில் தோன்ற அகலிடத்தின்
நடுக்குங் களிறென் றரமகளிர்
ஐயுற் றிடத்தன் வெளிறுமுடம்
பளறு படிந்த தெனக்கங்கை
யாற்றுப் பசும்பொன் அசும்புபுனல்.
மடுக்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ

**தெளிவுரை:** வரிசையாகக் கட்டப்பட்டு அழகான வெண்மை நிறத்திலான கொடிச் சீலைகள் ஒருபுறம், ஆழமான நீர்நிலையினை உடைய கடலின் முகம் வெதும்பிடும் படியாகக் காட்சியளிக்கும் சூரியனின், அழகான ஆற்றல் பொருந்திய தன்மையுடன் தேரினைச் செலுத்திடுவதற்காக அதில் கட்டப்பட்ட கடிவாளம் பூட்டிய தாவிச் செல்லும் தன்மையுடைய குதிரைகளைத் தாக்கி விரைவாகச் செலுத்தக் கூடியதான இடமாக விளங்குகின்ற பொன்போன்ற மாளிகைகளில் அலங்கரிக்கப் பட்டுள்ள முழு நீலத் தன்மையுடையதான இரத்தினங்களில் உண்டான ஒளியின் காரணமாக, அதில் மூழ்குகின்ற தெய்வத் தன்மையுடையதான ஐராவதம் என்கிற வெள்ளை நிற யானையானது மேகம் என்பதான தோற்றத்தினையுடைய கரிய நிறம் உடையதாகத் தோன்றியது. அந்நிலையில் ஐராவதமாகிய யானையினைக் கண்ட தெய்வ மகளிர் இது மண்ணுலகத்திலிருந்து இங்கு வந்துள்ளது போலும் என்று சந்தேகம் கொண்டனர். அதே நேரத்தில் அந்த தெய்வ யானையானதும் தன்னைத்தானே பார்த்துக் கருத்த நிறமுடைய தன்னுடைய தோற்றத்தினைக் கண்டு, பொன்னிறம் போன்ற தன்னுடைய வெண்மையான உடலில்



சேறுபட்டுவிட்டது என்று எண்ணி, ஆகாய கங்கையின் பசும்பொன்னைப் போலத் ததும்புகின்ற நீரில் நீராடத் தொடங்கியது. இத்தகையதாகப் பொலிவு பெற்று விளங்குகின்றதான செல்வச் செழிப்பினை உடைய கந்தபுரியினில் எழுந்தருளியுள்ளவனான முத்துக் குமரப் பெருமானே! உமையம்மையின் வயிற்றில் தோன்றிய முழுமையாக விளங்குகின்றவனான முருகப் பெருமானே! உன்னைத் தாலோ தாலேலோ என்று தாலாட்டுகின்றேன்! நீ உறங்குவாயாக!

**சொல்விளக்கம்:** பரவை - கடல்; பரிதி - சூரியன்; கவினம் - கடிவாளம்; வாம்பரி - தாவுகின்ற குதிரை; முகம் - இடம்; பரி - குதிரை; அளறு - கருஞ்சேறு;

**பொருள்விளக்கம்:** இப்பாடலும் புள்ளிருக்கு வேலூரின் செல்வச் செழிப்பினைக் கூறுகின்றது.

கடவுள்தன்மை உடைய பெரிய யானை என்பது இந்திரனுடைய பட்டத்து யானையாகிய ஐராவதம் ஆகும். இந்த யானைக்கு நான்கு கொம்புகள் இருக்கும்.

3

தீற்றுங் கதைவெண் ணிலவெறிப்பத்
திரள்மா மணிகள் வெயில்விரிக்குஞ்
செம்பொன் தலத்துப் பேரமர்க்கட்
சிறியார் நறிய அகிற்புகைவிட்
டாற்றுங் குழற்காட் டினைப்புயலென்
றாடு மயில்கண் டம்பவளத்
தரும்பு நகைவைச் சகோதரப்புள்
அருந்த விரிந்த முழுநகையின்

றேற்று நிலவுக் கிந்துசிலை
யொளிர்மா ளிகையுங் குளிகையும்
உருகிப் பெருகுங் கலுழிவெள்ளம்
உவரோ டுவரிக் கடற்புலவு

மாற்றுங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

**தெளிவுரை:** பூசப்பட்டிருந்த சுண்ணாம்புகளிலிருந்து வெண்மை நிற ஒளி வீசியது. பெரிய மாணிக்கங்களும் ஒளியினை உண்டாக்கின. செம்பொன்னினால் செய்யப்பட்ட பெரிய மாளிகைகளின் மேல்நிலை மாடங்களில் இருந்த போர் செய்வதனைப் போன்றதான பெரிய கண்களை உடைய சிறுமியர்கள் நறுமணம் கமழ்ந்திடக் கூடிய அகிலினால் புகையினை உண்டாக்கினார்கள். அந்தப் புகையினில் தங்களுடைய கூந்தலை உலர்த்தினர். அந்தக் கூந்தலை மேகக் கூட்டம் என்று எண்ணி, ஆடுகின்றன மயில்கள். இந்தக் காட்சியினைக் கண்ட அந்தப் பெண்களின் பவளம் போன்ற சிறிய வாயிலிருந்து தோன்றிய புன்முறுவலைச் சகோதரப் பறவையானது உண்டது. இதனால் அப்பெண்களின் வாயிலிருந்து முழு நகையானது வெளிவந்தது. பெரிய அந்த முழு நகையின் நிலவொளி, சந்திர காந்தக் கல்லைப் பதித்து ஒளி வீசுகின்ற மாளிகைகளிலும், மேல் மாடங்களிலும், உவர்ப்புத் தன்மையுடைய கடலில் உண்டாகும் உவர்ப்பையும் புலால் நாற்றத்தையும் நீக்குகின்றது. இத்தகைய தெய்வத் தன்மை உடைய கந்தபுரியில் எழுந்தருளியுள்ளவனான முத்துக்குமரப் பெருமானே! பார்வதிதேவியின் திருவயிற்றில் அவதரித்த முழு மணியினைப் போன்றவனான சண்முகப் பெருமானே! உன்னைத் தாலோ தாலேலோ என்று தாலட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

**சொல்விளக்கம்:** சுதை - சுண்ணாம்பு; அமர்க்கண் - போரிடுகின்ற கண்கள்; புகையிட்டு - புகையினை ஊட்டி; சூளிகை - மேல்மாடம்; விண்டல் - வெளிவருதல்; சிலை - சந்திரகாந்தக்கல்; புயல் - மேகம்.



**பொருள்விளக்கம்:** 'அதிகமாகக் கூந்தல் நல்ல அடர்த்தியுடன் இருந்ததனால் குழற்காடு' என்றார்!

'கரிய மேகங்களைக் கண்டால் ஆடும் இயல்புடையது மயில்'. பெண்கள் தங்கள் கூந்தலைப் பல்வேறு விதமான வாசனைப் புகைகளால் ஈரம் ஆற்றுதல் இயல்பு.

கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாஇயக்குங்
கீழ்நீ ரமுவக் குண்டகழிக்
கெழுமு புனல்தெண் டிரைமேய்ந்து
திளைக்குங் கமஞ்சூல் நெடும்புயலைச்
சிறுகட் பெருங்கைப் பகடென்றோர்
செங்கட் களிறு பிளிறதிமிர்
திகிரி கிரியென் றிவர்ந்துடலம்

இளைக்கும் படிவிண் தொடநிவந்த
எழிற்பொற் புரிசை விண்டுபதத்
தேறும் ஏணி பொன்தருவுக்
கிடுவே லியுமா யேழுலகும்
வளைக்குங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

**தெளிவுரை:** சகரர்கள் நூற்றுவர்களால் தோண்டப் பட்ட பெரிய கடல் என்று எண்ணி, முதலைகள் உலவக் கூடியதான ஆழமான நீரினை உடைய அகழியில் உண்டாகும் அலைகளையே உணவாகப் பருகி அதனால் செழித்த மழை மேகங்கள் வானத்தில் தோன்றின. அதனைக் கண்ட சிறிய கண்களையும் பெரிய துதிக் கைகளையும் உடைய யானைகள் அதுவும் தம்மினம் என்று நினைத்துப் பிளிறலாயின. அப்பிளிறலைக் கேட்ட மேகங்கள், அடுத்திருந்த மதில்களை, உயர்ந்த சக்கரவாளமலை என்று

நினைத்துத் தம்முடைய உடல் இளைக்கும் படியாக ஏறக் கூடிய வானை எட்டும் அளவில் உயர்ந்து விளங்குகின்ற அந்த அழகான மதிலானது ஆகாயமாகிய இடத்தினை அடைவதற்கு ஏறத் தகுந்த ஏணியாகவும் அழகான கற்பகச் சோலைகளுக்கு வேலியாகவும் விளங்குகின்றது. இவ்வாறு ஏழுலகங்களையும் வளைத்திடக் கூடியதான பொன்போன்ற மதில்கள் சூழ்ந்த தெய்வத் தன்மையுடைதான கந்தபுரியில் எழுந்தருளியுருக்கும் கந்தப் பெருமானே! உமையம்மை ஈன்றெடுத்த முத்துக்குமரன் என்னும் முழுமணியே தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! கண்ணுறங்குவாய்!

**சொல்விளக்கம்:** பெருங்கிடங்கு - கடல்; இடங்கர்ம - முதலைகள் ஆகிய விலங்குகள்; கொழுமு - நிறைதல்; கீழ் நீர் - ஊற்று நீர்; புரிசை - மதில்; கமம் சூல் - முதிர்ந்த சூல்; விண்டுபதம் - ஆகாயம்; திகிரிகிரி - சக்கரவாளகிரி.

**பொருள்விளக்கம்:** பெரிய அகழிகளையே மேகங்கள் கடல் என்று நினைத்து நீரினை உண்ணுகின்றன. அந்த மேகங்களைப் பார்த்த யானைகளும் இவையும் யானைகள் என்று நினைத்துப் பிளிறுகின்றன. இவற்றின் ஓசைகேட்ட மேகங்கள் தூர நகர எண்ணி மேலே செல்லும் காட்சியானது அங்கிருந்த மதிலின் மீது மேகம் தவழ்வதாக உள்ளது. அந்நிகழ்வு உயர்ந்த மதில்களையே சக்கரவாள மலைகளாக நினைத்து ஏறியதனால் அந்தமதில்களே ஏணிகளாகவும், வானில் உள்ள கற்பகச் சோலையின் வேலியாகவும் காட்சி அளிக்கின்றது என்பது கந்தபுரியில் உள்ள மதிலின் உயர்வைக் கூறுவதுடன் இப்பாடல் சிறந்த கற்பனையுடனும் அமைந்துள்ளது.

5

சோலைப் புறமுப் புடைக்கனிகள்
தூக்கு முடத்தெங் கிமையவர்தந்
தோன்றல் திருவோ லக்கத்துத்
தோகை மயிலின் நடங்குயிற்றும்
ஏலக் கருங்கொந் தளஅளகத்
திளமா தருக்கு முதிர்வேனில்
இளைப்பாற் றுதற்குத் தாற்றொடுஞ்செவ்
விளநீர் கொடுப்ப ஈற்றுளைந்த
காலப் புயலின் முகந்துடைக்குங்
கமுகு பழுக்காய்ப் பவளமுடன்
கதிர்முத் திட்டுச் செழும்பாளைக்
கற்றைக் கவரி புடையிரட்டும்
மாலைப் பழனப் பரிதிபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.



**தெளிவுரை:** தேங்காய்களைத் தாங்கி சோலைகளில் வளைந்து கிடந்த தென்னை மரங்கள், இந்திரனின் பெரிய அவையினில் தோகையுடைய மயில்களைப் போன்று நடனம் ஆடுகின்ற, கூந்தலில் சாந்தினை அணிந்து கரிய நிறமுடைய கூந்தலாகக் காட்சி தருகின்ற இளம் பெண்களுக்கு, முதுவேனிற் காலத்தினில் ஏற்படுகின்ற இளைப்பினைத் தீர்த்திட வேண்டிக் குலைகளோடு செவ்விள நீர்க் காய்களைக் கொடுத்தன. தம்முடைய இறுதிக் காலம் வந்தது என்று நினைத்து வருந்துகின்ற கார்கால மேகங்களின் முகத்தின் சோர்வினைத் துடைத்துக் கொண்டிருந்தன ஓங்கி வளர்ந்த கமுகு மரங்கள். நன்கு பழுத்த காய்களாகிய பவளத்தோடு ஒளி வீசுகின்ற முத்துக்களை விரித்துச் செழிப்பான பாளைகளாகிய கற்றைச் சாமரைகளைக் கொண்டு பக்கத்தில் இருந்து அசைந்து கொண்டிருக்கும் வகையில் செழித்து வளர்ந்துள்ள வயல்கள் சூழ்ந்த பரிதிபுரியில் எழுந்தருளியுள்ள முத்துக் குமரப் பெருமானே! உமையம்மை ஈன்றெடுத்த முழுமணியெனத் திகழும் மாணிக்க வேலனே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலட்டுகின்றேன்! கண்ணுறங்குவாயாக!

**சொல்விளக்கம்:** முப்புடைக்கனி - தேங்காய்; இமையவர் தோன்றல் - இந்திரன்; திருவோலக்கம் - பேரவை; தாறு - குலை; மாலைப்பழனம் - வரிசையான வயல்கள்;

**பொருள்விளக்கம்:** 'புள்ளிருக்கு வேலூரின் வயல்வளம் தென்னையும் கமுகும் பூத்துக் குலுங்கும் இயல்புடையது என்பது கூறப்பட்டது'.

'முதுவேனில் பருவம் என்பது கார், கூதிர், இளவேனில் முதுவேனில், முன்பனி, பின்பனி என்ற ஆறு பருவங்களில் ஒன்றாகும்', கமுகின்பழங்கள் பவளம் போல் சிவந்தும், பாளை முத்துப் போன்றும் உள்ளதனால் 'கமுகு பழுக்காய்ப் பவளமுடன் முத்திட்டுச் செழும் பாளை' என்றார்.

### வேறு 6

மாலி மயத்து மடப்பிடி பெற்று
வளர்த்த இளங்களிறே
மழவிடை யேதிரு மாமடி கட்கென
வைத்த கவுத்துவமே
மூல மெனக்குல நான்மறை யோலிடு
முழுமுத லேமூவா
முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி
முத்திக் கொருவித்தே
காலை யிளங்கதி ருக்கெதிர் முதிருங்
கதிர்செம் பவளமுடன்
கதிர்முத் திட்டுவ ணங்கக் கன்னல்கொல்
கமுகுகொ லெனவளரும்
சாலி வயல்தமிழ் வேளு ரடிகேள்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ.

**தெளிவுரை:** மேகங்கள் தவழ்கின்ற இமயமலையினில் பிறந்து உமையம்மை என்கிற இளம்பிடியினால் நன்றாக



வளர்க்கப்பட்டு யானைக் கன்று போன்று திகழக்கூடிய பெருமானே! இளமைத் தன்மையுடையய இடபம் போன்றவனே! திருமாமனாகிய திருமாலுக்கென்று சிறப்பாக அமைந்த கவுத்துவ மணியினைப் போன்றவனே! எல்லாவற்றிற்கும் முதன்மையாகவும் மூலமாகவும் உள்ளவனே! நான்கு வேதங்களில் குறைகளையும் தீர்க்கும் ஆற்றலுடைய முழுமுதற் பொருளே! அழியாத மூன்று கண்களை உடைய சிவபெருமானிடத்தில் தோன்றிய கனியினைப் போன்று பழுத்த சுவையினையுடையவனே! ஈடு இணையில்லாததான வீடுபேறினை அடைந்திடுவதற்கு ஒப்பற்றக் காரணனாகத் திகழ்ந்திடக் கூடியவனே! காலையில் தோன்றக்கூடிய இளஞ்சூரியனுக்கு எதிராகத் தோன்றக் கூடிய முதிர்ச்சி பெற்ற நெற்கதிர்களை உடைய செம் பவளங்களோடு, ஒளியுடைய தன்னுடைய முத்தினையும் சேர்த்து வணங்கப் பார்த்தவர்கள் கரும்பா?, கமுகா? என்று வியந்து போற்றும்படியான வயல்கள் சூழ்ந்ததும் முத்தமிழினை வளர்த்திடுவதுமான புள்ளிருக்கு வேலூர் என்கிற தலத்தினில் எழுந்தருளியுள்ளவனான முத்துக்குமரப் பெருமானே! முதற் தமிழ்ச் சங்கத்தினில் தலைப்புலவனாக வீற்றிருந்த முருகப் பெருமானே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன். நீ கண்ணுறங்குவாயாக.

**சொல்விளக்கம்:** மால் இமயம் - மேகங்கள் படர்ந்த இமயம்; மடப்பிடி - உமையம்மை; கன்னல் - கரும்பு; திருமா மடிகள் - திருமால்; முக்கண்கனி - சிவபெருமான்; சாலி - செந்நெல்.

**பொருள்விளக்கம்:** முதல் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவன் என்பது கடல் கொண்ட மதுரையில் இருந்ததான முதல் தமிழ்ச் சங்கத்தினில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானும், கிரௌஞ்ச மலையைத் தன்னுடைய வேலினால் பிளந்த தமிழண்ணல் முருகவேளும், அகத்தியனாரும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்பவர்கள் உள்ளிட்ட ஐந்நூற்று நாற்பத்து

ஒன்பது நாள்கள் இருந்து செந்தமிழினை ஆராய்ந்து வளர்த்தனர் என்று வரலாறு கூறுகின்ற நிகழ்ச்சியை ஒப்புக் கொண்டிருக்கிட வேண்டி.

7

கருங்கால் குயில்கள் தாய்த்தல வாசம்
கல்லாரு பூவைகள் நம்
கல்லார் பெருங்கவிகள் புலவு முடிந்தலை
காணா நாட்டுதல்
பெருகுளை சருவித் தவறனில் விளைந்ததும்
புழுதி நிலவேறுமல்
புன்குறிப்படாவி வெள்ளி வளைக்கண
பெருநிலை வயல்குழைத்
குறைவால் வயிர் புலவேறும் வட்டில்
குவழிந் வருமிடக
முத்தில் பெருகில் மேறு படைத்தலோர்
கத்தர் பிடவேறுதல்
கருவிலை தொழுந்தில் தத்தில் கிளைப்பம்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ

**தெளிவுரை:** காவிரிக்கரையினை மேலாய்முனையான திருவாரூரும் காவிரியுடையாராகிய ஆயிய திருவடிகளை கல்யாணி சுடர் என்பதான கருமுகில் புறவைகள் கண்டு மகிழ்ந்திடும் ஆனால் அவ்வாறு புறவையாகச் சென்றும் திருவடியைக் காணமுடியாமல் கெட்டுக்கூடன் திருவடிக் கத்தர் பிரம்மா அவையான உடைய கல்லைவில் நிறுவி தவழ்கின்ற திருவடியை மீது பிறைச் சந்திரனின் ஒளி வீசிட்டக் கூடியதான சிறப்புக்களையுடையவனாகப் புனிதருக்கு வேதாகம் எழுத்துருவியதான கவிதாயங்களைச் வாசகமான பொன் வளைவினை போன்று கிடந்திட்டக் கூடியவனான கைக்கிருமங்களில் எல்லை பொருந்திய வயிரம் பாய்ந்த தோள்கள் என்பதான எட்டு வகைகளிலும் கருப்புகள்



உண்டாகும் படியாக குத்தும் போர் செய்திருக்கின்ற இரண்டு கொம்புகளை உடைய சுடு இணையில்லாத அழகிய கத்தமைப்புடையவனான பெயரானையாகிய உமையம்மை பெற்றுக் கத்த ஒப்பற்ற தோற்றமுடையவனாய முதுகிலிருந்தவனே முத்துக்குமாரப் பெருமானே கடல் கொண்ட மதுரையில் கூடிய தலைச் சங்கத்தில் தலைமைத் தமிழ்ப் புலவனே தாலோ தாலேலோ என்று உன்னைத் தாலாட்டுகின்றோம் நீ கண்ணுறங்குவாயாக.

**சொல்விளக்கம்:** கருமுகில் - கார்மேகம் போன்ற நிறமுடைய திருமால் இருபட்கள் - கல்யாணி, சுடர் கத்தி பிடி - காரிகைக் குருவுமை - நான்முகன் எட்டுக்குறும்பு - எட்டுநிலையும் இருகோடு - இரண்டு கொம்புகள் கத்தி - யானை என்பது இங்கு விரிவுகள்.

**பொருள்விளக்கம்:** இப்பாடலில் திருமால், பிரம்மா இருவரும் காவலாகவும் திருவடியை திருவடிகளைக் காணும் பெரும் சுவாமி சுடரமணிக்குக் கிடைத்த செய்தி விளக்கப்படுகிறது. மேலும் சிவபெருமான் ஆற்றல் உடையவன் என்பதனைக் குறிக்க எட்டுக்குறும்பு என்றார். அவரது மைந்தனான உமையம்மையும் ஆற்றலில் குறைந்தவரில்லை என்பதனை உணர்த்திடவே இருகோடுகள் என்றார். இங்கு இருகோடு என்பது இரண்டு கொம்புகளையும் குறிக்கும்.

8

உரவொலித் தொண்டை ஞானத்தின் சித்தி
துளிவீடு முழுதணிவே
உம்பரு நூற்கலை முடியில் முதற்றிடும்
குழுவிளர் வாகுமே
வெண்மொழி வண்ணர விழுக்கி அருட்சரி
விழியும் இயற்கமதே
பெரும்புகழ் வேதாது சாதனைநெறி விடை
விளைவுற விளங்கொளியே

புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும்
　　புனித நறுங்கனியே
　　புள்ளூ ரெனவெம துள்ளத் தடநிறை
　　புத்தமு தக்கடலே
தண்ணொளி பொங்கிய கருணா நிதியே
　　தாலோ தாலேலோ
　　சங்கத் தமிழின் தலைமைப் புலவா
　　தாலோ தாலேலோ

**தெளிவுரை:** மனம் உருகி வேண்டிப் பணிகின்ற அடியவர்களின் உள்ளங்களில் உள்ள அறியாமையாகிய இருளினைப் போக்கிடக் கூடிய ஞான ஒளியினை வீசுகின்ற மாணிக்கம் போன்று திகழக் கூடியவனே! உயர்ந்த வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், மற்றும் ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் பற்றிய செய்திகளை உடைய பல உயர்ந்த நூல்களின் முடிந்த பொருளாக விளங்கும் ஒளியினையுடைய மரகதம் போன்று திகழந்திடுகின்றவனே! விண்ணுடன் மண்ணினையும் உட்கொண்டு அருள் என்கிறதான ஒளிவீசுகின்ற கதிர்களை வீசுகின்ற இளம் சூரியனைப் போன்றவனே! உண்மையாகிய அறிவினால் புலன்களை வென்று அமைந்துள்ள உள்ளமாகிய ஒப்பற்ற வீட்டினை உயர்வடைச் செய்யக் கூடிய ஞான விளக்கின் ஒளியாக உள்ளவனே! புண்ணியம் பரிமளிக்கின்ற ஒரு பெண்கனியாகிய உமையம்மை மனமகிழ்ச்சியுடன் இந்தவுலகத்திற்கு அருளிய ஞானப்பழம் என்று திகழ்ந்திடக் கூடியவனே! புனிதமான புள்ளிருக்கு வேலூர் போல என்னுடைய மனமாகிய இடத்தில் நிறைந்த புதிய அமுதக்கடல் போன்று இனிமையானவனே! அருள் ஒளியினைத் தாங்கியிருக்கக் கூடியதான அருட்செல்வனே! முத்துக்குமரப் பெருமானே! கடல் குடித்த மதுரையில் கூடிய முதற் சங்கத்தின் தலைமைப் புலவனாய் விளங்கிய தமிழ் அண்ணலே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!



**சொல்விளக்கம்:** புத் அமுதம் - அமுதம்; இருள்சிந்திட - அறியாமையாகிய இருள் விலகும் படியாக; வீடு - இங்கு மனத்தினைக் குறித்தது.

**பொருள்விளக்கம்:** 'உயர்மறை நூற்கலை முடிவின்' என்பதனை மறை நூல்முடிவிலும், வேதத்தின் முடிவிலும், ஆகமாதிகளாகிய நூல்களின் முடிவிலும், ஆயகலைகளின் முடிவிலும் என்று பொருள் கொள்ள வேண்டும்'.

'புண்ணியம் நாறுமொர் பெண்கனி' என்றது உமையம்மையை.

## 7 வேறு

தோலாத முத்தமிழ் நாமா மூவா மாவாமச்
　　சூர்வேர் அறத்தொடு வேலா நூலா நூலோதும்
　　சீலாம லைக்கொடி பாலா கீலா மேலாகும்
　　தேவாதி பற்கொரு தேவா ஓவா தேகூவும்
காலாயு தக்கொடி வீறா ஏறா வேறேறும்
　　காபாலி பெற்றகு மாரா வீரா பேராளா
　　சேலார்வ யற்குரு கூரா தாலோ தாலேலோ
　　சேணாப திப்பெரு மாளே தாலோ தாலேலோ

**தெளிவுரை:** வளர்ச்சி நிலையினையே எப்போதும் உரிமையாகக் கொண்டிருக்கக் கூடிய முத்தமிழினை அகத்திய மாமுனிவனுக்குப் பயிற்றுவித்த நாவினையுடையவனே! அழியாத மாமரமாய்ச் சூரபதுமன் நின்றபோதும் அவனுடைய ஆணவம் வேருடன் அழிந்து போகும்படியாக அழிக்க எறிந்த ஞான வேலினை உடையவனே! ஒருவராலும் இயற்றப்படாத வேத நூல்களில் கூறப்பட்ட ஒழுக்கங்களை உடையவனே! மலைமகளாகிய பார்வதியின் பாலனே! ஒளிவடிவம் உடையவனே! மேன்மை பொருந்திய இந்திரன் முதலான தேவர்களுக்கும் தேவனாக விளங்குபவனே! இடைவிடாமல் கூவுகின்றதான சேவற் கொடியினை உடையவனே! எவரும் ஏறிடாத இடபத்தின்

மீது ஏறிடக் கூடியவனான சிவபெருமானின் சிவகுமாரனே! வீரனே! கீர்த்தியுடையவனே! சேல் மீன்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த புள்ளிருக்கு வேலூர் என்னும் தலத்தினில் எழுந் தருளியுள்ள முத்துக்குமரப் பெருமானே! தேவசேனாதி பதியாய் விளங்கும் பெருமானே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணறங்குவாயாக.

**சொல்விளக்கம்:** தோலாத - தோல்வியடையாத; கபாலி - சிவபெருமான்; மா - மாமரம்; சீலம் - நெருப்புப் பிழம்பு; நூலா நூல் - யாதாலும் எழுதப்படாத வேதம்; மலைக்கொடி - உமையம்மை; குருகூர் - புள்ளிருக்கு வேலூர்; காலாயுதம் - சேவல்; அச்சூர் - அந்த சூரபதுமனை; பெருமான் - பெருமையுடையவன்.

**பொருள்விளக்கம்:** 'நூலா நூல்' என்பது வேதத்தைக் குறிப்பது. இது யாராலும் எழுதப்படவில்லை என்பதனால் இதனை எழுதாக கிளவி என்றும் கூறுவர்'. 'ஏறாஏறு - என்பது சிவபெருமான் எப்போதுமே மற்றவர்கள் விரும்பாத பொருள்களை விரும்பி ஏற்பவர். பாம்பு, மண்டை ஓடு, யானை, புலியின் தோல், இவ்வகையில் காளையினை வாகனமாகக் கொண்டார். மற்றவர்கள் யானை, குதிரை- இவைகளை விரும்பும்போது இவர் யாரும் வாகனமாக ஏறாத காளையைக் கொண்டார். என்பதும், திருமாலையே காளையாகக் கொண்டார் என்பதும் செய்தி'.

10

ஊனாயு யிர்க்குயிர் ஆனாய் தாலோ தாலேலோ
ஓதாது ணர்த்திடு போதா தாலோ தாலேலோ
ஆனாஅ ருட்கனு பானா தாலோ தாலேலோ
ஆயாத சொற்சொலு பாயா தாலோ தாலேலோ
நானாயெ னக்கரி தானாய் தாலோ தாலேலோ
நாதாதி கட்கனு பூதா தாலோ தாலேலோ
தேனார்பொ ழிற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனாப திப்பெரு மானே தாலோ தாலேலோ.



**தெளிவுரை:** உடம்பாகவும் அந்த உடம்பினுள் இருக்கின்ற உயிராகவும் இருக்கக் கூடியவனே! ஓதாமல் உணர்த்திடக் கூடியதான அறிவினை உடையவனே! நீங்காத கருணையின் துணையாய் இருப்பவனே! ஆராயாத சொற்களான பிரணவங்களைச் ஆராய்ந்து சொன்ன தந்திரனே! நான், எனது என்று எண்ணுகின்றவர்களுக்கு எட்டாத அருமையுடையவனே! நாதம் முதலானவைகட்கு அனுபூதமானவனே! தேன்நிறைந்ததான மலர்கள் விளங்கும் சோலைகள் நிறைந்த புள்ளிருக்கு வேலூர் என்கிற தலத்தினில் எழுந்தருளியிருக்கும் முத்துக் குமரப் பெருமானே! தேவர்களின் சேனாதிபதியாய் விளங்கும் பெருமானே! தலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

**சொல்விளக்கம்:** ஊன் - தசை; உயிர்க்குயிர் - அந்தராத்மா; போதா - ஞானத்தையுடையவனே; அனுபானர் - உடனிருப்பவர்; போதம் - ஞானம்; ஆயாதசொல் - பிரணவம்; அனுபூதன் - பிரமாணங்களைக் கொண்டு அறிபவன்.

**பொருள்விளக்கம்:** 'நாதாதிகள் - நாதம் முதலான நாதத்தத்துவங்கள்'.

'நானாயெனக்கரிது - நான், எனது என்பது ஆணவம் எனவே இந்நினைவு இறையை அடைய விடாது'.

## 4. சப்பாணிப் பருவம்

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் நான்காவது பகுதியாக அமைக்கப்படுவது சப்பாணிப் பருவம் ஆகும். இப்பகுதியானது குழந்தையாகப் பாவித்துப் பாடப்படுகின்ற பாட்டுடைத் தலைவன் (அ) தலைவியின் ஒன்பதாவது மாதத்தில் அமைகின்ற நிகழ்வாகும், இப்பருவத்தில் குழந்தை அமரத் தொடங்கி இருக்கும், அமர்ந்த குழந்தையைத் தன் கைகளை ஆட்டிடவும், இரண்டு கைகளையும் ஒன்றாகச்

சேர்த்துக் கைத்தட்டுதல் என்ற நிகழ்ச்சிகளைச் செய்யும். அக்குழந்தையினைச் சுற்றிப் பெற்றவர்களும் மற்றவர்களும் அக்குழந்தையின் சிறப்புகளை எடுத்துச் சொல்லி கையினைத் தட்டும்படி வேண்டுவர்கள். அக்கைகளைத் தட்டும்போது ஏற்படுகின்றதான 'சப்' என்ற ஓசையினையும் கை என்ற பொருளுடைய 'பாணி' என்பதனையும் இணைத்து 'சப்பாணி' என்றாகியது.

முடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தீன்றநறு
 முளரிப் பிராட்டி வைத்து
 முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை
 முதிருமென் குதலைகற்பத்
தொடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்ககில்
 தூமமொடு தாமம்இட்டுச்
 சுடிகை நுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
 தூரியங் கொண்டுதீட்டிக்
குடங்கைக் கடங்கா நெடுங்கட் கடைக்கழகு
 கூரஅஞ் சனமெழுதிமென்
 கொங்கைத் தடத்துப் பசுங்களபம் அப்பியவள்
 குற்றேவல் முற்றுமாற்றித்
தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட்டவன்
 சப்பாணி கொட்டியருளே
 தையல்நா யகிமருவு தெய்வநா யகன்மதலை
 சப்பாணி கொட்டியருளே.

**தெளிவுரை:** வளைந்த தன்மையுடையதான அலைகளையுடைய திருபாற் கடலானது தன்னுடைய வயிற்றினில் வலித்திடும் படியாகப் பெற்றுக் கொடுத்த வாசம் மிக்கதான செந்தாமரை மலர் என்கிற பீடத்தைப் பெற்றவளான திருமகள், தன்முன் கைகளில் வைத்து முத்தமிட்டு விளையாடுகின்ற பச்சைப் பசுங்கிளியினைப் போன்று மழலை மொழியுடன் கூடிய குதலை மொழியினைக் கற்கத் தொடங்கக் கூடிய குறப்பெண்ணான வள்ளிநாயகியின்



கற்றையான அடர்ந்த கூந்தலுக்கு அகிலுடன் கூடிய புகையினையும் பூமாலைகளைச் சூட்டியும், சுட்டியினை அணிந்துள்ள நெற்றியினில் தோன்றுகின்ற வியர்வைத் துளிகளைத் துடைத்தும், நெகிழ்ந்த கஸ்தூரிப் பொட்டினைப் போல மீண்டும் எழுதுகோலால் எழுதியும், உள்ளங்கைக்கு அடங்காததான கடைக் கண்களுக்கு மையினைத் தீட்டியும், மென்மைத் தன்மையுடையதான கொங்கைகளுக்குப் பகமையான சந்தனத்தைப் பூசியும், அவளுடைய சின்னச் சின்ன வேலைகளையும் முழுமையாகச் செய்து பெரிய குங்குமம் பூசிய தோள்களைக் தட்டிக் கொண்டே நடனம் செய்தவனே! தையல் நாயகியார் சேர்த்த தெய்வநாயகப் புதல்வனான முத்துக்குமரனே! இரண்டு கைகளையும் சேர்த்து ஓசை உண்டாகும் விதமாகச் சாப்பாணி கொட்டி அருள் செய்வாயாக!

**சொல்விளக்கம்:** பரவை - கடல் - திருப்பாற்கடல்; உளைந்து - நொந்து; முளரிப் பிராட்டி - திருமகள்; தாமம் - மாலை; குடங்கை - உள்ளங்கை; குலப்பாவை - வள்ளிநாயகி; அகில்தூமம் - அகிற்புகை; கூர் - மிகுதி; சுடிகை - கட்டியணிந்த; களபம் - சந்தனம்.

**பொருள்விளக்கம்:** 'குறமகளான வள்ளி திருமகளின் மகள் என்பதனால்' வைத்து முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை என' என்று கூறினார்!

மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயல்நெடு
 மதரரிக் கெண்டையுண்கண்
 மான்கன்றை அமருலகு வாழப் பிறந்திடு
 மடப்பிடியை வானவில்லைக்
குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
 கொடுப்பக் குடங்கையேற்றுக்
 கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
 கொம்புமின் கொடியின் ஒல்கி

இழைக்கும் பசும்பொன் தசும்பென வசம்புபொன்
இளமுலை முகங்கோட்டிநின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கனோக்
கின்னமுத மூற்றவின்பம்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
தையல்ந யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாை. கொட்டியருளே.

**தெளிவுரை:** *கார் மேகங்களைப் போன்ற கருமையான கூந்தலையும், தோகை மயிலினைப் போன்ற இளஞ் சாயலினையும், நெடிய மதர்த்த செவ்வரி படர்ந்த கெண்டை மீன் போன்றதான மையினையுடைய கண்களையும் உடைய இளமையான மான்கன்றினைப் போன்றவளும், விண்ணுலகம் வாழ்ந்திடும் படியாகத் தோன்றிய இளமையான பெண் யானையினைப் போன்றவளும் ஆகியவள் தெய்வானை. அவளை வானவில்லினையே வளைத்திடக் கூடியதான திருக்கைகளை உடைய திருத்தந்தையான தேவேந்திரன் தாரை வார்த்து நீருடன் கொடுத்தான். அதனை உள்ளங்கையினால் ஏற்றுக் கொண்டு, மலர்கள் மணம் வீசக் கூடியதான மணப் பந்தலில் நீ அழகுடன் நின்றாய். அப்போது பூங்கொம்பினைப் போன்ற தெய்வானையானவள் மின்னல் கொடியினைப் போல அசைந்து நின்றும், பசுமையான பொற்குடத்தினைப் போலப் பரவியதான தேமலை உடைய இளமையான முலைகள் வரையிலும் முகம் வளைந்து நிற்கும்படியாகவும் அறியாமை யினால் பார்க்கின்றதான வேற்படையினைப் போன்ற கண்கள், கடைக்கண் நோக்கிய இனிய அமுதமானது அமுதத்தினை வார்க்கக் கூடியதான இனிமைகள் நிறைந்த இடமாகிய பேராசை என்கிற கடலினில் மூழ்கியவனே! தையல் நாயகியினைச் சேர்ந்த தெய்வ நாயகனான புதல்வன் முத்துக்குமரப் பெருமானே! நீ உன்னுடைய இரண்டு கைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டி அருள்வாயாக!*



**சொல்விளக்கம்:** கொத்தளம் - கூந்தல்; திளைத்தல் - அனுபவித்தல்; கலபம் - தோகை; அமர் உலகு - தேவர் உலகு; திருத்தாதை - தேவேந்திரன்; குடங்கை - உள்ளங்கை; பந்தர் - பந்தல்; கோட்டி - வளைந்து; அக்கொம்பு - தெய்வானை; தசும்பு - குடம்; எய்த்தல் - அறிதல்.

**பொருள்விளக்கம்:** இப்பாடல் தெய்வானை திருமண நிகழ்வினைப் பேசுகின்றது சிறப்புடன்; 'மான்கன்றை மடப்பிடியை என்றதும் தெய்வானையைக் குறித்தே'. 'வானவில்லைக் குழைக்குற் தடக்கைத் திருத்தாதை என்றது இந்திரனைக் குறித்தே'.

'முகம்கோட்டிநின்று' என்றது தெய்வானை ஞானத் தினால் தலை குனிந்து நின்ற காட்சியினைக் குறித்தே'.

உண்ணிலா உவகைத் தடங்கடல் படிந்திட்ட
உம்பருஞ் செங்களம்பட்
டொண்பருதி யுடல்கிழித் தோடுங் கடற்றானை
ஒளிறுவா ளவுணர்குழுவும்
தெண்ணிலா மதிநுதல் தெய்வப் பிணாக்கள்வாய்த்
தேனமுது மமுதவாரித்
தெள்ளமுதும் உடனிருந் துண்ணப் பணித்திட்ட
செங்கைவேல் பைம்புனத்துப்

பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற்
பாவைவிழி வேலொடொப்புப்
பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துநின் றவள்திருப்
பவளத்து முத்தரும்பும்
தண்ணிலா வுக்கொண் சகோதரமென நின்றவன்
சப்பாணி கொட்டியருளே
தையல்நா யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

**தெளிவுரை:** *மனத்தினில் உண்டான நிலையான மகிழ்ச்சி என்கிற பெருங்கடலினில் மூழ்கின தேவர்களும், போர்க்*

களத்தினில் உயிரினை விடுத்து, சூரிய மண்டலத்தினைக் கிழித்து வீரசுவர்க்கத்தினை வேகமாக அடைந்தது கடலினைப் போன்ற வாட்படையினைக் கொண்ட அவுணர்களின் கூட்டம், பிறை நிலவினைப் போன்ற நெற்றியினை யுடையவர்களான தெய்வப் பெண்களின் வாயினில் தோன்றிய அமுதத்தினையும், பாற்கடலினில் பிறந்த தேவாமிர்தத்தையும் சேர்ந்திருந்து உண்ணும் படியாகக் கட்டளையிட்டது செங்கையில் இருந்த வேல். தினைப் புனத்தினில் இசையுடன் கூடிய இனிமையான மொழிகளைப் பேசுகின்றவர்களின் பெண்ணான வள்ளி நாயகியின் கண்ணானது முருகப் பெருமானின் வேலினைப் போன்றே இருப்பதனைப் பார்க்கின்ற போதெல்லாம், தலைகுனிந்து நிற்கின்ற அவளுடைய திருப்பவள வாயினில் உண்டாகக் கூடிய முத்துக்களாகிய புன்முறுவலைக்காண நிலவொளிக்கு ஏங்கி நிற்கும் சகோரப் பறவையினைப் போல் நிற்கின்ற வனான முத்துக்குமரப் பெருமானே! தையல் நாயகியை இடது பாகத்தில் கொண்டவனின் குழந்தையாக வந்தவனே! நீ இரண்டு கைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** திருப்பவளம் - சிறந்தவாய்; முத்து - பல்லை உணர்த்தி - சிரிப்பினை உணர்த்தியது; உம்பர் - தேவர்; அவுணர் - அரக்கர்; தெய்வப் பிணாக்கள் - தெய்வப் பெண்கள்; எயினர் பொற்பாவை - வள்ளி நாயகி.

**பொருள்விளக்கம்:** 'போர்க்காலத்தில் புறமுதுகு காட்டாமல் போரிட்டு வீரசுவர்க்கம் அடையக் கூடியவர்கள், சூரியமண்டலம் புகுந்த பின்னர் அங்குள்ள தெய்வப் பெண்களை அனுபவிப்பார்கள் என்பது செய்தி. எனவே செங்களம் பட்டு- செங்கைவேல்' என்று கூறினார்'.

'போரில் இறந்தவர்களின் உடலில் பெருகிய இரத்தத்தினால் சிவந்த இடமாக இருப்பதனால் போர்க்களம் செங்களம் என்றார்.'



14

மடநடைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின்
  மயிலிளஞ் சாயலுநிலா
  மணிவடம் அறப்புடைத் திருமாந்த கனதன
  வணப்புங் குறித்துநோக்கி
இடுகிடைப் பாவிக் கினிப்பிழைப் பில்லைகொல்
  எனத்திரு உளங்குழைந்தாங்
  கேந்திளங் கொங்கையை இணைப்புயத் தேந்திநின்
  றெல்லா உறுப்புநிற்கக்
குடமுலைக் கேயிவள் குடிப்பிறப் புக்கியை
  குணங்கிடைத் ததுகொலென்றக்
  கோதைநெடு நாணெய்த அவயவங் கட்குள
  குணாகுணந் தனிதெரிக்கும்
தடமலர்க் கைத்தலஞ் சேந்தொளி துளும் பவொரு
  சப்பாணி கொட்டியருளே
  தையல்நா யகிமருவு தெய்வநா யகன்மதலை
  சப்பாணி கொட்டியருளே.

**தெளிவுரை:** இளமையான நடையினையும் தெய்வத் தன்மையும் உடையவளான குறப் பெண்ணான வள்ளி நாயகின் திருவடிவில் தோன்றிய மயிலின் சாயலையும், முத்து மாலைகள் அறுந்து விழுந்திடும்படியாகப் புடைகொண்டு நிமிர்ந்து கொண்டிருந்த கொங்கைகளினையும் உற்றுப் பார்த்து, சின்ன இடையாகிய பாவி, இனி பிழைக்கவே முடியாது என்று நினைத்து மனம் உருகி, இளமையான கொங்கைகளை இரண்டு தோள்களாலும் 'தாங்கி நின்றபடி எல்லா உறுப்புகளும் நிற்க, குடம் போன்ற கொங்கைகளுக்கு இவளின் குலப்பிறப்பிற்கு ஏற்றதான கொல்லும் குணம் கிடைத்தது என்று அந்த வள்ளியானவள் வெட்கம் அடைந்திடும்படியாக ஒவ்வொரு உறுப்புகளின் நன்மை தீமைகளையும் தனித்தனியாகச் சொல்லுகின்ற பெரிய தாமரை மலரினைப் போன்றதான உன்னுடைய இரண்டு கைகளும் சிவந்திடும் படியாகத் தட்டி சப்பாணி கொட்டி அருள்க! தையல் நாயகியினை இடது பாகத்தின் கொண்ட

தெய்வ நாயகனின் புதல்வனான முத்துக்குமரப் பெருமானே! நீ சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** கனதனம் - பருத்த கொங்கைகள்; குணாகுணம் - நன்மை. தீமைகள்; இடுதல் - சிறுகுதல்.

**பொருள்விளக்கம்:** 'குடமுலைக் கேயிவள் குடிப் பிறப்புக்கியை குணங்கிடைத்தது கொலென்ற' என்றது வள்ளியாகிய குறத்தி பிறந்த குறவர்களின் குலத்தொழில் வேட்டையாடிக் கொல்லுதல், இங்கே இவளுடைய பெரிய கொங்கைகள் ஆசையினை உண்டாக்கிக் கொல்லுகின்றது என்கிற தன்மை கருதி கூறினார்!

**விண்ணொண் கடற்புவன் முடவுப் படத்தேந்து**
**வேந்துபொலி பாந்தள்வைப்பும்**
**விரிநீர் வரைப்புமெழில் விஞ்சையர் இருப்புமுகை**
**விண்டுநறை விரிமுண்டகக்**
**கண்ணன் திருப்பதமு நான்முகக் கடவுள்பூங்**
**கஞ்சமுங் குலிசப்பிரான்**
**கற்பகக்காவுநின் தொண்டர்கள் தொழும்புக்கொர்**
**காணியா வைத்துமற்றத்**
**திண்ணொன் தடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட**
**சீராரும் ஊரூர்தொறும்**
**செந்தினைப் புனமூடு தண்சாரல் பிறவுமாம்**
**சீதனக் காணிபெற்றத்**
**தண்ணொன் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்**
**சப்பாணி கொட்டியருளே**
**தையல்நா யகிமருவு தெய்வநா யகன்மதலை**
**சப்பாணி கொட்டியருளே.**

**தெளிவுரை:** விண்ணுலகில் உள்ளவர்களும் மதித்திடக் கூடிய கடல் சூழ்ந்த இந்த உலகம் முழுவதனையும் தன் படங்களினால் தாங்கிக் கொண்டிருக்கக் கூடியதான நாகங்களின் தலைவனான ஆதிசேஷன் வாழும் நாகர் உலகத்தினையும், கடலால் சூழப்பட்டதான இந்த உலகத்தினையும்,



அழகிய வித்தியாதரர்கள் வாழுகின்ற உலகினையும், அரும்புகள் விரிந்து வாசம் வீசக் கூடிய தாமரைக் கண்ணனாகிய திருமாலின் திருப்பாதம் தங்கிய பரமபதத்தினையும், பிரம்மனது அழகான மலர்த்தவிசாக விளங்கக் கூடிய சத்திய லோகத்தினையும், வச்சிராயுதத்தை உடைய இந்திரனின் கற்பகச் சோலையினை உடைய விண்ணுலகத்தினையும், உன்னுடைய அடியவர்களான தொண்டர்களுக்கு உரிமையாக்கினாய்.

நீயோ வலிமையுடை பெரிய கையினில் வில்லினை ஏந்திய வேடர்கள் குடி கொண்டிருக்கக் கூடியதான சிறிய ஊர்களும், ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள செந்தினைப் புனங்கள் நிறைந்த குளிர்ச்சியான மலைச் சாரல்களையும், மேலும் சிலவற்றையும் உன்னுடைய சீதனமாகப் பெற்று, அந்தக் குளிர்ச்சி பொருந்திய குறிஞ்சி நிலத்தினைக் காவல் செய்து கொண்டிருக்கக் கூடியவனாகிய முத்துக்குமரப் பெருமானே! தையல் நாயகியினை இடதுபாகத்தில் கொண்டவனான தெய்வ நாயகனின் மகனாகிய முத்துக்குமரனே, நீ இரண்டு கைகளையும் இணைத்துச் சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** பாந்தன் வைப்பு - நாகர் உலகம்; முண்டகக்கண்ணன் திருப்பதம் - பரமபதம்; குலிசம் - வச்சிராயுதம்; தொழும்பு - தொண்டு; புவனம் - உலகம்; காணியாட்சி - உரிமை நிலம்; பூங்கஞ்சம் - சத்தியலோகம்.

**பொருள்விளக்கம்:** 'நாகர் உலகம், வித்தியாதர உலகம், பரமபதம், சத்தியலோகம், விண்ணுலகம், மண்ணுலகம் ஆகிய அனைத்து உலகங்களையும் தொண்டர்கள் அனுபவிக்கும் படியாக விடுத்து, தனக்கு விருப்பமானதாகச் சிறிய தினைப்புனம் சூழ்ந்த மலைச்சாரலை அடைந்தான் முருகன் என்பறதால், குறிஞ்சி வள்ளி வாழிடம், எனவே இதனை விரும்பினர்ன் என்பதும் தன்னை வணங்கும் அடியவர்களுக்கு மேலுலகம் அடைவதான மோட்சம் அளித்திடக் கூடியவன் என்பதும் பெறப்பட்டது.

'முண்டகக் கண்ணன் என்பது தாமரையினைப் போன்ற கண்களை உடையவன் என்பது மட்டுமின்றி கமலக் கண்ணன் என்கிற பெயரினையும் உடைய திருமாலையே உணர்த்தியது'.

## வேறு

6

கடலைச் சுவற வடித்தும் இடித்துக்
கனவரை துகள்கண்டும்
கடிதில் திரிய வகுப்பதை யொப்பக்
காரவு ணக்கடலின்
உடலிற் பெருகிய குருதிக் கடல்பிண
ஓங்கலொ டோங்கவமைத்
தொட்டிய ஒட்டல ரிற்பிற கிட்டவர்
ஒழியப் பிறரையெலாம்
தடவுத் தாழியின் மத்தெறி தயிரின்
தத்துதி ஏப்புனலில்
தசைகுடர் நிணமொடு மூளை குழம்பச்
சமர்விளை யாடல்செயும்
குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

**தெளிவுரை:** கடலினையே வற்றும் படியாகச் செய்ததற்கும். கிரவுஞ்ச மலையானது பொடிப் பொடியாகும்படிச் செய்ததற்கும் சமமாக கரிய நிறமுடைய அரக்கர்களின் கூட்டத்திலிருந்து வழிந்த உதிரக் கடலானது பிணமலைகளுடன் உய்ந்து தோன்றும் படியாகத் தோன்றச் செய்து, பகைவர்களில் புறமுதுகு காட்டி ஓடியவர்களைத் தவிர, மற்ற அனைவரையும் பெரிய பானையில் போட்டு மத்தினால் கடைகின்றதான தயிரினைப் போல . இரத்த வெள்ளத்தினில் கிடந்த மாமிசம், குடல், நிணத்தோடு மூலையும் சேர்ந்து சேறாக ஆகும்படி போர் விளையாடல்



களைச் செய்திடக் கூடியதான ஒளிவீசும் கூர்மையான வேற்படையினை ஏந்தியவனே, வடித்து எடுத்த இனிய தமிழ் வழங்குகின்ற வேதபுரியின் கண் காட்சி தர எழுந்தருளியுள்ள முத்துக்குமரப் பெருமானே! உன் இரண்டு கைகளையும் தட்டிச் சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக

**சொல்விளக்கம்:** சமர் - போர். கனவரை - கிரௌஞ்ச மலை பிணவோங்கல் - பிணமலை; ஒட்டவர் - பகைவர்; பிறகிட்டவர் - புறமுதுகுகாட்டி ஓடியவர்கள்.

**பொருள்விளக்கம்:** கடலினை வற்றிடச் செய்ததற்கும், கிரௌஞ்ச மலையினைப் பிளந்ததற்கும் நிகராக அவுணர்களின் உதிரக் கடலையும், பிணமலையையும் குவித்த வெற்றியுடைய வேல்படையினை ஏந்தியவன் என்பதாகும்

சமரிற் பட்டவர் வெட்டிய பூதத்
தலைவர்கள் திற்பமுதல்
தாமரை நாயகன் வயிறுகிழித்துத்
தந்தொழில் தலைநின்றாங்
கமரிற் குரிய மடக்கொடி யாரை
அலைத்தனர் பற்றியெயிற்
றவுண ரெனத்தமை யுணரார் கணவர்கள்
ஆர்ப்பில் வெடித்தபெருங்
கமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு
களமெதிர் கண்டினியக்
காரவு ணக்கடல் குரொடு மாளக்
கடிதில் தடிதியடற்
குமரக் கடவு ளௌப்பணி வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

**தெளிவுரை:** போரினில் இறந்துபட்ட அவுணர்களை வெட்டிய பூதத்தலைவர்கள் போர்க்களங்களிலேயே

இருந்தனர், முதல்வனான சூரியனின் நடு வயிற்றினைக் கிழித்துக் கொண்டு வீர சொர்க்கம் அடைந்து, அவுணர்கள் என்ற நிலையில் தங்களுக்குரிய கொடுந் தொழிலைச் செய்து போர்க்களத்தினில் இறந்துவிட்ட அவுணர்கள், இளமை யான கொடியினைப் போன்ற தெய்வப் பெண்களை அழுத்திப்பற்றியவுடன், தாங்கள் வீர சொர்க்கம் அடைந்த அவுணர்கள் என்பதனை மறந்து அக்கொழுநர்கள் எழுப்பிய பெரிய ஓசையினால், வெடித்த பெரிய வெடிப்பின் வழியே உள்ளே சென்று, உதிரமானது பாதாலத்தை நிறைக்கக் கூடியதான போர்க்களத்தினைப் பார்த்து, 'இனி இந்தக் கரிய அவுணக் கடலானது. கரனுடன் மாண்டு அழிந்துபோகும் படியாக வேகமாக வெட்டிடுவாயாக' என்று போற்றிடக் கூடியதான வெற்றித் திருமகனாகிய முத்துக்குமரப் பெருமானே! தமிழ் வளர்க்கும் வேதபுரியில் எழுந்தருளி யிருக்கும் குமரேசப் பெருமானே நீ இரண்டுகைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டியருள் செய்திடுவாயாக

**சொல்விளக்கம்:** தாமரை நாயகம் - சூரியன்; பெருங்கமர் - பெரிய நில வெடிப்பு; அவுணக்கடல் - அவுணர்களின் கடலாகியசேனை; சமர்-போர்; தடிதல் - வெட்டல்.

**பொருள்விளக்கம்:** பிரிந்த கணவன் மீண்டும் வரும் போது கற்புடைப் பெண்கள் முகம்மலர்ந்து மகிழ்வதனைப் போன்று முதல் நாள் இரவில் பிரிந்து சென்ற சூரியன் காலை வந்தவுடன் தாமரை மலர்ந்திடுவது கண்டு சூரியனைத் 'தாமரைநாயகன்' என்றார்!

அவுணர்கள் வீரசொர்க்கம் அடைந்த பின்னர், தாம் அவுணராதலை மறந்து தேவர்களின் நலனை வேண்டிடுவர் என்பதனை விளக்கும் பொருட்டுக் காரவுணக் கடல் குறொடுமானக் கடிதில் தடிதிஅடற் குமரக்கடவுள் என்றார்.

அற்ற உடற்குறை இற்ற முடித்தலை
அங்கைத் தலம்வைத்திட்



8

டாடு பறந்தலை யோடுதி ரப்புனல்
ஆறு கடத்துகெனும்
சிற்றல கைக்கொரு பேரல கைப்பெண்
தோழி யக்கழியும்
திகிரிப் பரிசில் விடப்படு கழியில்
தெருமரல் மட்பகைஞன்
பற்றிய திரிகை திரித்து விடத்திரி
பரிசென வுஞ்சுழலும்
பம்பர மெனவும் வரும்படி அவுணர்
படக்கள வேள்விசெயாக்
கொற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

**தெளிவுரை:** போரில் அவுணர்களின் உடல்கள் அறுபட்டு குறைகளுடன் வெட்டுண்டு வீழ்ந்த முடித் தலைகளை உள்ளங்கைகளால் ஏந்திக் கொண்டு கூத்தாடுகின்ற போர்க்களத்தில் 'பெருகி ஓடுகின்ற இரத்த ஆற்றினைக் கடக்க உதவி செய்திடுங்கள்' என்று வேண்டு கின்ற சின்னப் பேய்களுக்கு, ஒரு பெரிய பெண் பேயானது போரில் அழிந்து கிடந்த ஒரு தேரின் சக்கரத்தினைத் தோணியாக இரத்த வெள்ளத்தின் சுழியில் செலுத்திட அத்தோணியும் சுழல ஆரம்பித்தது. ஒரு குயவனானவன் தான் பற்றிய திரிகையைச் சுற்றிவிடச் சுழலுகின்றதனைப் போலவும் சுற்றுகின்ற பம்பரத்தினைப் போன்றும் அந்தத் தோணியானது காட்சியளித்தது. அவுணர்களுக்காகக் களவேள்வியினைச் செய்து வெற்றித் திருமகளைப் புணர்ந்த ஒளிவீசும் வேலினையுடையவனான வேலவனே! செழிப் புடையதான தமிழ் வளர்ந்திடக் கூடியதான வேதபுரியில் எழுந்தருளியிருக்கின்ற முத்துக்குமரப் பெருமானே! நீ இரண்டு கைகளையும் சேர்த்து சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** உடற்குறை - கவந்தம் - முண்டம்; பறந்தலை - போர்க்களம்; அலகை - பேய்; முடித்தலை - முடியணிந்த தலை; திகிரிப்பரிசில் - சக்கரமாகிய தோணி; தெருமால் - சுழலுதல்; கொற்றமகள் - வீரத்திருமகள்; துர்கை;

## வேறு

9

**வனிள வனமுலை மலைமக**
**ளுக்கொர்த வப்பேறே**
**மறிதிரை பொரநிமிர் கருணைகொ**
**ழித்தபெ ருக்காறே**
**அளியுமி ழமுதெழு வெளியினில்**
**வைத்தசு வைத்தேனே**
**அறமுது தவமொடு வளரவ**
**ளர்த்திடு நற்றாயே**
**களிமயில் கடவிவி ணடையமு**
**டுக்கிய புத்தேளே**
**கலைமறை யெனுமுரல் வரியளி**
**மொய்த்தம லர்க்காவே**
**தெளிதமிழ் பழகிய மதவலி**
**கொட்டுக சப்பாணி**
**தினகர புரிவரு தனிமுதல்**
**கொட்டுக சப்பாணி.**

**தெளிவுரை:** இளமையான அழகிய கொங்கைகளை யுடைய மலைமகளான பார்வதிக்கு ஒப்பற்ற தவப்பயனாய் விளங்கிட வந்தவனே! அலைகளையுடைய கருணையாகிய வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற வற்றாத தன்மையுடைய நதியினைப் போன்றவனே! கனிந்த இனிய அமுதமானது தோன்றிய வெளியிடத்தில் வைத்திருக்கக் கூடியதான சுவை யினையுடைய தேனினைப் போன்ற இனிமையுடையவனே! நல்ல அறநெறிக் கருத்துக்களை ஒரு கொள்கை தவத்துடன் வளர்த்திடக் கூடிய உயர்ந்த நல்ல வளர்ப்புத் தாயினைப் போன்றவனே! மகிழ்ச்சியினையுடைய மயிலினையே



தன்னுடைய வாகனமாகக் கொண்டு இந்த உலகம் முழுவதும் வேகமாகச் சுற்றி வரக்கூடிய தன்னிகரற்ற தெய்வமே! ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் வேதங்கள் நான் கினையும் வரியினையுடைய வண்டுகள் இசையாக எப்போதும் பாடி நெருங்கித் திரிந்திடக் கூடிய பூஞ்சோலை யினைப் போன்றவனே! தெளிந்த நல்ல கன்னித் தமிழினைப் பழகிய மதவலி உடையவனே! ஒப்பில்லாத தினகர புரியினில் எழுந்தருளியிருக்கக் கூடிய ஒப்பற்ற முதல்வனாகிய முத்துக்குமரப் பெருமானே! நீ இரண்டு கைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** மலைமகள் - பார்வதி; தினகரன் - சூரியன்; புத்தேள் - தெய்வம்; கா - சோலை; முடுக்குதல் - வேகமாகச் செலுத்துதல்.

**பொருள்விளக்கம்:** 'முத்தமிழின் முதல்வன் என்பதனால் தெளிதமிழ் பழகிய மதவலி' என்றார்.

10

**கனியொடு சுவையமு தொழுகிய**
**சொற்றயில் தத்தாய்வேள்**
**கனையொடு பிணையென வுலவு**
**கடைக்கண் மடப்பாவாய்**
**நளைமலர் பொதுளிய எழிலித**
**ழைத்தகு ழற்கோதாய்**
**நளிர்புன மிசைவளர் கலபம்வி**
**ரித்தம யிற்பேடே**
**எனவொரு குறமக ளடிமுடி**
**வைத்தனை முத்தேவாம்**
**இறைவரு முறைமுறை பணியமி**
**ருக்குமு தற்றேவே**
**சினவிடை யவரருள் மழவிடை**
**கொட்டுக சப்பாணி**
**தினகர புரிவரு தனிமுதல்**
**கொட்டுக சப்பாணி.**

**தெளிவுரை:** இனிமையான கனிகளுடன் சுவையான அமுதம் என்று திகழ்கின்ற இனிய மொழிகளைப் பயில்கின்ற கிளியினைப் போன்றவனே! மன்மதனின் பாணமாகிய அம்புகளுடன் பெண்மானைப் போல மருண்ட பார்வையினையும் உடையவளாக உலவுகின்ற கடைக்கண் பார்வையினை பெற்றிருக்கக் கூடிய இளமைத் தன்மையுடைய பாவை போன்றவளே! குளிர்ச்சி பொருந்திய மலர்களை மேகங்கள் சூடிக் கொண்டதனைப் போன்று காட்சிதரக் கூடியதான கூந்தலை உடையவளான கோதையே! குளிர்ச்சி பொருந்திய குறிஞ்சியின் தினைப் புனத்தில் வளர்ந்த தன்னுடைய தோகையினை விரித்து விளையாடுகின்ற பெண் மயிலினைப் போன்றவளே! என்றெல்லாம் போற்றப்படக் கூடியவளான குறவர் மகளாகிய வள்ளி என்ற பெண்ணின் பாதங்களில், உன்னுடைய திருமுடியினை வைத்திருக்க, உன்னையோ மும்மூர்த்திகளும் முறையாக வணங்கும்படி எழுந்தருள் செய்கின்ற முதன்மைத் தெய்வமே! கோபம் மிகுந்ததான இடபத்தினை வாகனமாக உடைய சிவ பெருமான் அருளுடன் பெற்றுத் தந்த இளங்காளை யானவனே! திவகரபுரியினில் எழுந்தருளியிருக்கும் முதற் பொருளே என்று போற்றிடக் கூடிய தன்மையுடைய முத்துக் குமரப் பெருமானே! நீ உன்னுடைய இரண்டு கைகளையும் சேர்த்து சப்பாணி கொட்டி அருள் செய்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** தத்தை - கிளி; பிணை - பெண்மான்; தளிர் - குளிர்ச்சி; பொதுளிய - நெருங்கிய; கலபம் - தோகை; முத்தேவர் - மும்மூர்த்திகள்.

**பொருள்விளக்கம்:** முத்தேவர் - மும்மூர்த்திகளான அரி, அரன், அயன்.

'இப்பாடல் முருகன் அழகிய வள்ளியின் பாதங்களில் காதலில் கிடக்க, முருகனை மும்மூர்த்திகளும் போற்று கின்றனர் என்பதனையே 'குறமகளடி முடி வைத்தவை முத்தேவாம் இறைவரு முறைமுறை பணியுஇ' என்றார்.



# 5. முத்தப் பருவம்

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியினைக் குழந்தையாகப் பாடுவதில் ஐந்தாம் நிலையாகும். இந்நிலையானது குழந்தையின் பதினோராம் மாதத்தில் நிகழும். இப்பருவத்தில் குழந்தையினை அதன் பெருமைகளைச் சொல்லித் தாய், தந்தை முதலானவர்கள் முத்தம் தரும்படியாக வேண்டுவார்கள்.

குருகு நாறு செந்தளிர்க்கைக்
    கொடிநுண் நுசுப்பிற் கோட்டிமயக்
    குலப்பூங் கொம்பு நறவூழ்த்த
    கொழுந்தா மரையோ டவிழ்த்த துழாய்ச்
சருகு நாறு முடைத்தலையின்
    தாம நாறு திரள்திண்தோள்
    தாதை யாருங் கண்டுகண்டு
    தடங்கண் களிப்பக் குரவுவிரித்
தருகு நாறு திருமேனி
    அந்தீங் குதலை மழலைகனித்
    தமுதம் ஊறு பசுந்தேறல்
    அசும்பு நாறத் தெய்வமண
முருகு நாறுஞ் செங்கனிவாய்
    முத்தந் தருக முத்தமே
    மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
    முருகா முத்தந் தருகவே.

**தெளிவுரை:** ஒளிவீசுகின்ற வளையல்களை அணிந்த செந்தளிரினைப் போன்றத் திருக்கைகளும், கொடியினைப் போன்றதான மிக நுட்பமான இடையினையும் கொண்டு, உயர்ந்த சிகரங்கள் நிறைந்த இமயமலையினில் உயர்ந்த பூங்கொடியாக விளங்குகின்றவளான உமையம்மையும், தேனைச் சிந்திடக் கூடியதான தாமரை மலர்களுடன் நறுமணம் கமழ்ந்திடக் கூடிய துளசி மாலைகளும் சேர்த்து

மணம் வீசிடக் கூடியவர்களான பிரம்மா, விஷ்ணு இருவரின் தலைமாலைகளையும் அணிந்திருக்கக் கூடிய பெரிய தோள்களை உடைய உன்னுடைய தந்தையான சிவபெருமான் பார்த்துப் பார்த்துப் பெரிய கண்களில் மகிழ்ச்சி நிறையும் படியாகக் குரவமலர்கள் விரிந்து வாசம் வீசுகின்ற அவருடைய மேனியில், அழகான இனிய குதலை மழலைச் முதிர்ந்து அமுதம் போன்று காந்திடக் கூடிய பசுமையான தேனானது துளித்திடக் கூடிய தெய்வத் தன்மையும் தெய்வமணமும் வீசுகின்ற தேன் மணக்கும் உன்னுடைய செங்கனியினைப் போன்ற அழகு வாயினால் முத்தம் தருவாயாக! முத்தமிழின் சுவையினை நன்கு தெரிந்த முருகப் பெருமானே! கந்தபுரியினில் எழுந்தருளியுள்ள முத்துக்குமாரப் பெருமானே, முத்தம் தருவாயாக!

**சொல்விளக்கம்:** குருகு - கைவளையல்; குரவு - முருகன் அணியும் மாலைகளில் ஒன்று; நாறும் - மணக்கும்.

**பொருள்விளக்கம்:** 'குருகு நாறு செந்தளிர்க் கைக் கொடி நுண் நுசுப்பிற் கோட்டு மைக் குவப் பூங்கொம்பு' என்னும் தொடர் பார்வதி தேவியைக் குறித்தது.

சிவபெருமான் பிரம்மா விஷ்ணுவின் தலைமாலைகளையும் சேர்த்து அணிந்திடும் இயல்புடையவன் என்பதனை ஒட்டித் 'தாமரையொடு அவிழ்ந்த துழாய்ச் சருகு நாறு முடைத் தலையின் தாம நாறு திண்தோள்' என்று கூறினார்.

முருகன் அணியும் மாலை, குரவு என்றதனால் இவையன்றி, கடம்பு, காந்தள், குறிஞ்சி, செச்சையும் அணிவான் என்பதனை அறிந்திடுக!

நறவு விரிந்த விரைத்தோட்டு
நளினத் தொட்டில் நடு முலைப்பால்
நல்கி வளர்த்த கைத்தாயர்
நகைவாள் முகத்தும் மார்பகத்தும்



குறுமென் நடைய சிறுபதங்கள்
குருதி ததும்ப உதைத்துமல
குறும்பு செய்தாய் நோமென்றென்
கோல்கோள் போக்கப் பெரும்புவனம்
நிறுவு பொருநின் பெருந்தன்மை
நினைந்தாய் போலக் கனிந்தமுது
நெக்குப் பசுந்தேன் அமிழ்தூற
நெடுவெண் ணிலவு விரிந்தருள
முறுவல் அரும்புஞ் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே.

**தெளிவுரை:** தேனுடையதும், மணமுடையதுமான இதழ்களையுடைய தாமரையாகிய தொட்டிலால் பெரிய முலைகளில் வழிந்த பாலினை ஊட்டி வளர்த்தார்கள், ஆறு கார்த்திகைப் பெண்கள். அவர்களின் புன்னகை வீசுகின்ற முகத்தினிலும், மார்பினிலும், குறுகியதும் மென்மைத் தன்மையுடையதுமான சின்னக் கால்களினால் இரத்தம் ததும்புகின்ற வகையில் நீ உதைத்து சில குறும்புகளைச் செய்தாய். அதனைக் கண்ட அந்தத் தாய்கள், உதைத்ததனால் உன்னுடைய பாதங்கள் வலித்திடும் என்று நினைத்து மெல்லிய தன்மையுடைய கோலை எடுத்து ஓங்கினார்கள். ஆனால் இந்தப் பெரிய உலகங்களையெல்லாம் நிலை நிறுத்துகின்றதான உன்னுடைய இணையற்ற தன்மைகளை எண்ணி நீ அவர்களிடம் கோபம் கொள்ளாமல் அமுதம் போன்ற பசுந்தேன் துளிகள் காந்திட நிலவொளி வீசுகின்ற புன்னகை ததும்புகின்ற உன்னுடைய செங்கனிவாயினால் அவர்க்கு முத்தம் தருவாயாக! முத்தமிழும் தேர்ந்து விளங்குகின்ற கந்தபுரியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானே! முத்துக்குமாரனே, நீ முத்தம் தருவாயாக!

**சொல்விளக்கம்:** நளினத் தொட்டில் - தாமரைத் தொட்டில்; புவனம் - உலகம்; அரும்பல் - துளிர்த்தல்.

**பொருள்விளக்கம்:** கைத்தாயர் என்பது கார்த்திகைப் பெண்களான அறுவரைக் குறித்தது.

பொழியுங் கருணைப் பெருவெள்ளப்
புணரி பெருகி அலையெறியப்
பொங்கி யெழுந்த பெருங்காதற்
புளகம் போர்ப்பப் போதுசெயும்
விழியும் மனமுங் குளிர்தூங்க
விரிநீர்ச் சடிலத் தொருவன்இரு
வீணைக் குதவுந் திருச்செவிகள்
விருந்தாட் டயர விரைகொழிந்து

வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு
மதுர அமுது குழைத்தூற்றும்
மழலை ததும்பப் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தையொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

**தெளிவுரை:** அருள் என்பதான வெள்ளத்தினையுடைய கடல் பெருகி அலைகளை வீசிடவும், பொங்கி மேலே எழுந்த அதீதக் காதலாகிய மயிர்கள் கூச்செறியவும், குளிர்ச்சியான தாமரை மலரினைப் போன்று மனமும் கண்களும் குளுமை அடைந்திடவும், கங்கையினைச் சடை முடியினில் தரித்த சிவபெருமானின் தும்புரு, நாரதர் ஆகிய இருவரின் வீணை இசைக்கு இடம் அளித்திருக்கக் கூடியதான காதுகள் விருந்தினைச் செய்திடவும், ஆக மொத்தத்தில் மணம் நிறைந்து வழிந்திடும் தேனைப் பிழிந்து அதனுடன் இனிமையான அமுதத்தினையும் குழைத்து வடித்ததனைப் போன்ற மழலை மொழிகளானது ததும்பிட, பழமையான வேதங்களின் சாறினை வடித்துத் தெளியவைத்ததனைப் போன்று ஒப்பற்ற பிரணவத்தின் பொருள் உரைத்த பவளம்



போன்ற உன்னுடைய சிவந்த கனியினைப் போன்ற வாயினால் முத்தம் தருக. முத்தமிழிலும் தேர்ந்து விளங்குகின்ற கந்தபுரியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே! முத்துக்குமரனே! உன் இனித்த இதழால் இனிய முத்தம் தருவாயாக!

**சொல்விளக்கம்:** புணர் - கடல்; புளகம் - மயிர்க் கூச்செறிதல், விரிநீர்சடிலத் தொருவன் - சிவபெருமான்; விரை - மணம்.

**பொருள்விளக்கம்:** 'பிரணவ மந்திரத்தினையே' பழமறையைப் படித்துத் தெளிந்த வார்த்தை என்று கூறினார்.

'இடுவீணைக்குதவும் திருச் செவிகள்' என்றது தும்பு, நாரதர் இருவரின் வீணைகளுக்கு மட்டும் இடம் கொடுத்துச் சாய்கின்ற செவிகள் சிவபெருமானுடையது என்பது ஆகும்,

கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலங்
கனியக் கனிய அமுதூறும்
கடவுள் மறையும் முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
தண்தேன் நறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசந்
தமிழும் நாறத் தடங்கரைகொல்

அலைப்பாய புனல்தெண் கடல்வைப்பும்
அகிலாண் டமும்பன் முறையீன்றும்
அழகு முதிர முதிராஎன்
அம்மை யமுது குற்கொண்ட
முலைப்பால் நாறுஞ் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே.

**தெளிவுரை:** நூல்களின் பல்வேறு பகுதிகளையும் தெளிவாகக் கற்றதனால் அதீத அறிவுடையவர்களாய் கல்விச் செல்வத்தினைக் கொண்டவர்களின் கேள்வி நலமானது முதிர முதிர அமுதத்தினைப் போன்றதான இனிமையினை யுடைய வேதங்களும் கடல் கொண்ட மதுரையில் இருந்த முதற் சங்கத்திலிருந்து திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமான், தமிழண்ணலாகிய முருகப்பெருமான், அகத்தியர் போன்ற பெரிய புலவர்கள், இனிய சுவையுடைய கன்களையும் இனிமையான தேனினையும் வடிகட்டி எடுத்த சாரம் உடைய பழுத்துச் சுரந்திருந்த பசுமையான தமிழும், பரிமளிக்க, பெரிய கரைகளையும் அழித்திடக் கூடியதான அளவிற்கு அலைகளை வீசுகின்ற கடல் சூழ்ந்த நிலவுலகத் தினையும், மற்றும் உள்ள எல்லா அண்டங்களையும், பலமுறை பெற்றும் கூட அழகு இன்னும் அதிகமாகிக் கொண்டே இருக்க, என்றும் இளமையுடன் இருக்கின்ற என்னுடைய அன்னையின் அமுதம் போன்ற சூல் கொண்ட முலைப்பால் மணக்கக் கூடிய உன்னுடைய கனிவாயினால் முத்தம் தருகவே! முத்தமிழிலும் தேர்ந்து விளங்கும் கந்தபுரியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே! முத்துக்குமரனே! இனிய முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** ஊற்றிருத்தல் - சுரத்தல்; கொல்லல் - அழித்தல்; முதுக்குறைவு - பேரறிவு; கடவுள் மறை - வேதம்

**பொருள்விளக்கம்:** தெய்வத்தன்மையுடையதான வேதங்கள் கொண்ட முதற்சங்கத்தில் வளர்த்த பைந்தமிழ் சொன்னாய் உன்வாயினால், இன்றும் அவை மென்மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. பலகாலம் கடந்திருந்தாலும் உனக்கும் உன்தமிழுக்கும் இன்னும் இளமை மாறவில்லை உலகங்களே அழிந்து தோன்றிய போதும் அழியாது வளர்ந்திடக் கூடியதான தமிழ் தந்த வாயால் முத்தம் தரு என்றது தமிழின் பழம் பெருமையை உணர்த்துகின்றது.

புயலுண் டிருண்ட கொந்தளமும்
பொன்னங் குழையும் இன்னகையும்



புளகம் பொதிந்த இளமுலையும்
புருவச் சிலையும் போர்த்தடங்கண்
கயலும் கலப மயிலியலும்
கன்னிப் புனத்தோர் பெண்ணமுதின்
காமர் நலனும் பன்னிரண்டு
கண்ணான் முகந்துண் டின்னமுதின்
இயலுஞ் சுவைநல் அவியொடுநீத்
தேக்கற் றிருந்தத் தாக்கணங்கின்
இழுமென் குதலை கனிந்தூறும்
இதழ்த்தேன் சுவைகண் டேமாப்பான்
முயலுங் குமுதக் கனிவாயால்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே.

**தெளிவுரை:** மேகங்களைப் போன்ற இருண்ட தன்மை யுடைய கூந்தலையும், தங்கத்தினால் செய்யப்பட்ட காதணிகளையும், அழகிய பற்களையும், பெரிய இரு முலைகளையும், வில்லினைப் போன்ற புருவங்களையும், கயல் போன்று போர் செய்திடக் கூடியதான கண்களையும், தோகையுடையதான மயிலின் தோற்றத்தினையும், கன்னியான தினைப்புனத்திலுள்ள ஈடுஇணையற்ற வள்ளி யானவள் அமுதில் அழகிய நலத்தினையும் பன்னிரெண்டு கண்களினாலும் எடுத்து உண்டுவிட்டாய். அதனால் இனிய அமுதத்தின் சுவையினையும் அவியினையும் நீக்கி ஏங்கியிருந்தாள். எனவே அந்தத் தெய்வப் பெண்ணான வள்ளியின் இனிமையான குதலைச் சொற்களைப் பழகுதலால் உண்டாகிய அதரத்தின் அமுதத்தின் சுவையினை உண்டு களித்திட்ட செவ்வல்லி மலர்போல் சிவந்த உன் வாயினால் முத்தம் தருவாயாக! முத்தமிழ் வித்தகர்கள் வாழ்கின்றதான கந்தபுரியில் உள்ள முருகப் பெருமானே! முத்துக் குமரனே! இனிய முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** இன்னகை - இனிய நகை - புன்னகை; அவி - அவியுணவு; தாக்கணங்கு - வள்ளிநாயகி; ஏமாப்பு - களிப்பு.

## வேறு

கோடுபடு கொங்கைக் குவட்டுக் கிளைத்திட்ட
கொடியிடைக் கடைசியர்குழாம்
குரவையிடு துழனியிற் கொண்டல்திரை வந்தாவு
குழுவுப் பகட்டுவாளை
சேடுபடு புத்தேள் நிலத்துப் புனிற்றிளஞ்
சேதா வயிற்றுமுட்டச்
சேய்கன் றெனத்தடவு மடிமடை திறந்தூற்று
தீம்பால் சினைக்கற்பகத்
தேடுபடு தடமலர்த் தேனருவி யொடுசொரிந்
தேரியொடு கால்நிரம்ப
இழுதுபடு கழனியுந் தெய்வமண நாறநென்
றின்சுவை முதிர்ந்துவிளையும்
காடுபடு செந்நெல்லைங் கன்னல்நிகர் புள்ளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கும் நெடியவன் தங்கைக்கும் ஒருமகன்
கனிவாயின் முத்தமருளே.

**தெளிவுரை:** வானையின் கூர்மையான கொம்பினைப் போன்ற கொங்கைகளின் மலைபோன்ற சுமையினால் மெல்லிய கொடியினைப் போன்ற இடையினை உடைய மருதநிலப் பெண்களின் கூட்டமானது, பாடுகின்ற குரவைப் பாட்டின் சத்தத்தினால், மேகங்கள் ஓரிடத்தில் சேர்ந்திடத் துள்ளி குதிக்கின்றன. இளமையான வாளை மீன்கள், புகழ் படைத்த விண்ணுலகத்தில் உள்ள, தற்போது ஈன்ற கன்று அண்மையில் நின்று கொண்டிருக்க, இளம் செந்திறப் பசுவின் மடியில் முட்டுகின்றது, வாளை மீன்கள் முட்டுகின்றன என்பது தெரியாமல் தன்னுடைய கன்றுதான் முட்டுகின்றது என்று நினைத்துப் பெரிய மடியாகிய அந்தப் பசுவின் மடி அதிகப் பாலை மடைபோலத் திறந்து விடுகின்றது. அப்படி ஒழுகுகின்ற இனிய பாலானது, கிளைகளை உடையதான கற்பக மலர்களிலிருந்து வழிந்து ஓடுகின்ற தேனருவியுடன் சேர்ந்தது. அதனால், கால்வாய்களும் ஏரிகளும் நிறைந்தன. இதன் காரணமாகச் சேறுபட்ட வயல்களிலெல்லாம் தெய்வ மணம் கமழத் தொடங்கியது. நெற்கதிர்களின் சுவை மேலும் இனிமை உடையதாக மாறியதனால் அந்த நெற்கதிர்களே பசுமையான கரும்பினைப் போன்று உள்ளன. இத்தகைய வளங்கள் நிறைந்த புள்ளிருக்கு வேலூர் என்பதான தலத்தினில் எழுந்தருளியிருக்கும் முத்துக் குமரப் பெருமானே! கங்காதேவிக்கும் திருமாலின் தங்கையான உமையம்மைக்கும் இணையற்ற புதல்வனாக விளங்குகின்ற முத்துக்குமரப் பெருமானே! நீ உன் இனிய வாயினால் முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** கோடு - யானையின் தந்தம்; கடைசியர் - மருதநிலப் பெண்கள்; துழனி - சப்தம்; சினை - கிளை; கோடு - பெருமை; கன்னல் - கரும்பு; சேதா - செந்நிறமுடைய பசு; பகட்டுவானை - ஆண்யானை; காடுபடுதல் - மிகுதல்; நெடியவன் - திருமால்.

**பொருள்விளக்கம்:** இப்பாடல் உயர்வு நவிற்சியாக அமைந்துள்ளது. இதில் கோடு என்பதனை கொங்கைக்கு உவமையாகச் சொன்னதனால் யானையின் தந்தம் என்று பொருளாயிற்று.

துனிதூங்கு மழைமுகிற் படலங் கிழிக்கும்
துகிற்கொடிகள் சோலைசெய்யத்
தோரண முகப்பில் தவழ்ந்தேறு கலைமதித்
தோற்றத்தை அறுகாண்மடுத்
தனிதூங்கு தேனிறால் இதுதம்மின் வம்மினென்
றழிநறா ஆர்ந்துநிற்கும்
அந்தலர் கைகூப்ப ஆடவர் பிழிந்தூற்றும்
அளவிலப ராதமிதென

ஒளிதூங்கு முகமதிக் கொப்பெனக் லேன்விடுதிர்
உயிரொன்று மெனவிடலுமவ்
உடுபதிக் கடவுள்நற வுண்டமற் றவினும்
உய்ந்தோம் ஒழிந்தோம் எனக்
களிதூங்கு மாடமலி கந்தபுரி வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் தங்கைக்கும் ஒருமகன்
கனிவாயின் முத்தமருளே.

**தெளிவுரை:** துளிர்ப்பதற்குத் தயாரான நிலையில் உள்ள குளிர்ச்சியுடன் கூடிய மழை மேகக் கூட்டங்களைக் கிழித்திடும்படியாக வானுயரக் கட்டப்பட்டதான கொடி ஆடைகள் சோலைகளைப் போன்று நிழல் கொடுத்தன. தோரணங்கள் கட்டப்பட்டுள்ள வாசலில் மெதுவாகத் தவழ்ந்தபடி ஏறிக் கொண்டிருந்தது கலைகள் நிறைந்ததான சந்திரன். அந்தச் சந்திரனைப் பார்த்த கள்ளுண்ட மயக்கத்தினில் இருந்த பெண்கள், 'தேனீக்களின் தேன் கூடு என்று நினைத்து ஆடவர்களிடம் கைகளைக் குவித்து வணங்கி அத்தேனடையை எடுத்துத் தாருங்கள்' என்று வேண்டிக் கொண்டனர். அதனைக் கேட்ட ஆண்களும் அதனைப் பிடித்து எடுத்துத் தேனடை என்று நினைத்துப் பிழிகின்ற போது, அந்த நிலவானது, 'நான் செய்தது தவறுதான், இங்குள்ள ஒளிவீசுகின்ற அழகான பெண்களுக்கு நான் இணையாக மாட்டேன், என் உயிரை விட்டுவிடுங்கள்' என்று வேண்டியது. இதனைக் கேட்ட ஆண்களும் அந்நிலவினை விட்டுவிட்டனர். உடனே அந்தநிலவும், 'கள்மயக்கத்தில் இருந்த அவர்களிடமிருந்து தப்பித்தோம், இனியும் இங்கிருந்தால் மீண்டும் அழித்துவிட முயலுவார்கள்' என்று நினைத்து வேகமாக வானத்தினைச் சென்று சேர்ந்து தவழ்ந்து கொண்டிருக்கக் கூடியதாகவும் அழகிய மாடங்கள் நிறைந்ததாகவும் உள்ள கந்தபுரியினில் எழுந்தருளியுள்ள முத்துக்குமரப் பெருமானே! கங்கா தேவிக்கும் திருமாலின் சகோதரியான பார்வதிதேவிக்கும் இணையற்ற குழந்தையாகத்



திகழ்ந்திடக் கூடியவனே! உன் இனிய வாயினால் முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** தேனிறால் - தேன்கூடு; உடுபதிக் கடவுள் - நட்சத்திரநாயகனான சந்திரன்; ஆர்ந்து - குடித்து; அபராதம் - குற்றம்.

பூமரு வுயிர்க்குங் கருங்கொந் தளத்துவிரி
பூந்துகட் படலமுமணம்
பொங்கிய நறும்புகைப் படலமுங் காலமழை
பொழிமுகிற் படலஞ்செயத்
தாமரை முகச்சோதி யெழவெழுஞ் சிறுமுறுவல்
தண்நிலவு செயவெயில்செயத்
தழல்மணிக் கலன்அகல் நிதம்பமொடு வெம்முலை
தடங்கடலு மலையுஞ்செயத்
தேமரு குழற்கோதை மயிலனீ கோசிகச்
செம்மலென வேறு புவனம்
செயவும்வல் லிரென மணந்திடை தணந்தவர்சொல்
செஞ்சொற் பசுங்கிளிசோலக்
காமரு மணங்குழைய மாதர்பயில் வேளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கும் நெடியவன் தங்கைக்கும் ஒருமகன்
கனிவாயின் முத்தமருளே.

**தெளிவுரை:** வாசம் நிறைந்த மலர்களைச் சூடிய கரிய கூந்தலில் விரிந்த மலர்த்துகளின் கூட்டமும், வாசம் ஊட்டுவதற்காக ஊட்டப்பட்ட புகைப்படலமும் கார்கால மழை மேகத்தினை ஒத்தமைந்தன. மேலும் தாமரை மலரினைப் போன்று முகமும் ஒளி வீசியது. புன்முறுவல் குளிர்ந்த நிலவினையே நினைவூட்டின. அவள் அணிந்திருந்த அணிகலன்கள் நெருப்பினைப் போன்று ஒளியினை வீசின. பெரிய அல்குலும், ஆசையினைத் தூண்டக் கூடியதான பெரியதான இரண்டு கொங்கைகளும் பெரிய கடலினைப்

போன்றும் மலையினைப் போன்றும், விளங்குவதுடன், மணம் வீசக் கூடியதான ஐம்பாலினை உடைய கூந்தலினைக் கொண்டு மயிலினைப் போன்று சாயல் உடையவர்களான பெண்களே, அன்று விசுவாமித்திரன் திரிசங்கு மன்னனுக்காகப் புதியதோர் உலகத்தினை உண்டாக்கியதனைப் போன்று, நீங்களும் உண்டாக்கும் ஆற்றல் பெற்றவர்கள்' என்று கூடி நடுவினில் பிரிந்தவர்கள் சொல்ல, அந்த அழகான சொற்களைக் கேட்டப் பைங்கிளிகளும் அதனை அப்படியே திருப்பிச் சொல்லும். அவைகள் சொல்லும் அந்த வார்த்தைகளைக் கேட்டு மனம் உருகுகின்ற பெண்கள் உலவக் கூடியதான புள்ளிருக்கு வேலூர் என்கிற தலத்தினில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமரப் பெருமானே! கங்கா தேவிக்கும் திருமாலினுடைய தங்கையான பார்வதிக்கும் இணையற்ற குழந்தையாகத் திகழ்கின்றவனே! உன்னுடைய இனிய வாயினால் முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** கொந்தளம் - கூந்தல்; காலமழை - கார்கால மழை; கோசிகச் செம்மல் - விசுவாமித்திரன்.

**பொருள்விளக்கம்:** காலமழை என்பது - கார்கால மழை என்றும், பெய்யவேண்டிய காலத்தினில் பெய்த மழை என்பதாகவும் அமையும்.

### வேறு

மதியும் நதியும் அரவும் விரவு
    மவுலி யொருவன் முக்கணும்
    வனச முகமும் அகமு மலர
    மழலை யொழுகு சொற்சொலும்
புதல்வ இமய முதல்வி யருள்செய்
    புனித அமரர் கொற்றவன்
    புதல்வ தழுவு கொழுந குறவர்
    சிறுமி குடிகொள் பொற்புய



கதிரு மதியும் ஒளிர ஒளிரும்
    ஒளிய அளிய கற்பகக்
    கனியின் இனிய உருவ பருவ
    மழையின் உதவு கைத்தல
முதிரும் அறிவில் அறிஞர் உணரும்
    முதல்வ தருக முத்தமே
    முனிவர் பரவு பருதி புரியின்
    முருக தருக முத்தமே.

**தெளிவுரை:** பிறைநிலவினையும், கங்கையினையும், பாம்பினையும் அணிந்திருக்கக் கூடிய திருமுடியினை உடைய ஒப்பற்றவனாகிய சிவபெருமானது மூன்று கண்களும், தாமரையினைப் போன்றதான முகமும், திருவுள்ளமும் மலர்ந்திடும்படியாக மழலையினைப் பேசுகின்ற குழந்தையே! இமவான் பெற்ற பார்வதியம்மையின் புனிதம் நிறைந்த புதல்வனாக விளங்குகின்றவனே! தேவர்களின் தலைவனான தேவேந்திரனின் மகளாகிய தெய்வானைத் தழுவிட கணவன் என்பதான உரிமை படைத்தவனே! குறமகளாகிய வள்ளி குடிகொண்டுள்ள தோள்களை உடையவனே! சூரிய சந்திரர்கள் ஒளிவீசிட தானும் உடன் ஒளிவீசியபடி உலாவருகின்றவனே! கற்பகக் கனியினை விடவும் இனிமையானவனே! பருவகாலத்தில் வருகின்றதான மழையினைப் போன்று எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அள்ளிக் கொடுத்திடக் கூடிய கைத்தலத்தினையுடையவனே! பேரறிவுடைய அறிஞர் பெருமக்களும் அறிந்து கொள்ளவிரும்பும் தன்மையுடைய பெருமானே!

முனிவர்கள் வழிபடுகின்ற பரிதிபுரம் எனும் தலத்தினில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே! உன் இனிய வாயினால் முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** மவுலி - திருமுடி; வசை முகம் - தாமரை போன்ற முகம்; கொழுநர் - கணவர்; குறவர் சிறுமி - வள்ளி; அளிய - கனிந்த.

**பொருள்விளக்கம்:** 'கதிரும் மதியும் ஒளிர ஒளிரும் ஒளிய என்ற தன் காரணம் சூரிய சந்திரர்களுக்கு அந்தர் மியமாயிருந்து அவர்கள் ஒளிவீசக் காரணமானவன் என்பதனைக் குறித்தது'.

'கற்பகக்கனியின் இனிய உருவ என்பது கற்பக மரத்தினின்றும் கிடைத்திடக் கூடிய கனியினைவிடவும் இனிமைத் தன்மை உடையவன் அதாவது அழகன் என்பதனைக் குறித்தது'.

வடிவின் அழகும் எழுத அரிய
புயமும் தரிய செச்சையும்
மருமம் விரவு குரவும் அரையின்
மணியும் மணிகொள் கச்சையும்
கடவு மயிலும் அயிலு மொழுகு
கருணை வதன பதுமமும்
கமல விழியும் விழியு மனமும்
எழுதி யெழுதி நித்தலும்
அடிக ளெனவு ளடிகள் பணியு
மடியர் அலது மற்றும்வே
றமரர் குழுவும் அகில மறையும்
அரியு மயனு முற்றுநின்
முடியு மடியு முணர அரிய
முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின்
முருக தருக முத்தமே.

**தெளிவுரை:** உன்னுடைய தோற்றத்தின் அழகும், எழுதுவதற்கரியதான இரண்டு தோள்களும், அந்தத் தோள்களில் தவழ்ந்திடக் கூடியதான செச்சை மாலைகளும் குரவமலர் மாலைகளும் துலங்குகின்றன. இடுப்பினில் கட்டப்பட்டதான மணியும், அழகான கச்சையும், வாகனமாகச் செலுத்தக் கூடிய மயிலும், வேலும், அருள் நிறைந்த முகத்தாமரையும், தாமரை போன்ற கண்களும், உடைய



உன்னுடைய தோற்றத்தை அடியவர்கள் தங்களுடைய கண்களிலும், மனதினிலும் எழுதி, தினம்தினம் உன் திருவடிகளைப் பணிந்திடக் கூடியதான அடியவர்களின் கூட்டம் மட்டுமின்றி, அவர்களைத் தவிர தேவர்களின் கூட்டமும், வேதங்களும், அடிமுடி காண முடியாதவர்களான திருமால், நான்முகனும் உணர்ந்திட முடியாததான தன்மைகள் உடையவனான முதல்வனே! முனிவர்கள் போற்றுகின்றதான பரிதிபுரத்தினில் எழுந்தருளியுள்ள முத்துக்குமரப் பெருமானே! உன் இனிய வாயினால் முத்தம் தந்திடுவாயாக!

**சொல்விளக்கம்:** மருமம் - திருமார்பு; அரை - இடுப்பு; கச்சை - கௌபீனம்; அயில் - வேல்; கடவும் - செலுத்தும்; கடவு - பகுதி.

**பொருள்விளக்கம்:** 'செச்சை, குரவு என்பது முருகன் விரும்பி அணியும் மாலைகள்'.

மணிகொள் கச்சையும் எனப்பிரித்து மாணிக்க மணியினை உடைய பாம்பினை இடையில் அணிந்தவன் என்பதாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.

'விழியும் மனமும் எழுதி' என்றது அடியவர்கள் எப்போதும் உன்னையே நினைத்துப் போற்றுகின்றார்கள் என்பதாகும்!.

## 6. வருகைப் பருவம்

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் இது ஆறாவது பருவம் ஆகும். இப் பருவத்தினில் குழந்தையாகப் பாவித்துப் பாடப் பெறுகின்ற பாட்டுடைத் தலைவன் (அ) தலைவியின் பதின் மூன்றாம் மாதத்தில் இப்பருவம் பாடப்படுகின்றது. இப்பருவத்தில் குழந்தையானது தத்தித் தத்தித் தளிர் நடையிட்டு நடைபயிலத் தொடங்கும். இக்காலத்தில் தாய் உள்ளிட்டவர்கள் அருகிருந்து குழந்தையின் பெருமைகளைச் சொல்லி அருகினில் வரும்படியாக அழைத்து மகிழும் பருவமாகும்.